தமிழ்நாடு அரசு
தொல்லியல் துறை

ஆணையர் அலுவலகம்,
தமிழ் வளர்ச்சி வளாகம்,
தமிழ்ச்சாலை, எழும்பூர்,
சென்னை–8

ந.க.எண்.அ4/4217/2017–1 நாள். 19.09.2024

பொருள். பணியமைப்பு – தொல்லியல் துறை – அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர் – இளநிலை உதவியர் / உதவியர்களுக்கான 41 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படை பயிற்சி – 64வது அணி (05.10.2024 முதல் 25.11.2024 முடிய) நடைமுறைப்படுத்துதல் – தொடர்பாக.

பார்வை. மாவட்ட வருவாய் அலுவலர்/ முதல்வர், அரசு அலுவலர் பயிற்சி நிலையம், பவானிசாகர், கடித எண். ந.க.எண். அ3/4696/2024, நாள். 12.09.2024

------------

பார்வை 1–ல் காணும் அரசு கடிதத்தில், பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்தில் இளநிலை உதவியாளர் / உதவியாளர்களுக்கான 41 பணி நாட்கள் கொண்ட சுருக்கப்பட்ட அடிப்படை பயிற்சி 64–வது அணிக்கு (05.10.2024 முதல் 25.11.2024 முடிய முடிய) பணியாளர்கள் முதுநிலையின்படி அழைக்கப்பட்டுள்ளனர்.

எனவே, மேற்படி அடிப்படை பயிற்சியில் கலந்து கொண்டு பயிற்சி பெற கீழ்க்காணும் அலுவலர்களுக்கு அனுமதி வழங்கி ஆணையிடப்படுகிறது.

1. திருமதி ச.கிளாரின் மதனா, உதவியர்(நி.உ), சென்னை
2. திரு வீ. தினேஷ்குமார், இளநிலை உதவியாளர், தஞ்சை

இதன்படி, மேற்படி அலுவலர்கள் 04.10.2024 முற்பகல் 09.00 மணி (வெள்ளிக்கிழமை) பவானிசாகர் அரசு அலுவலர் பயிற்சி நிலையத்திற்கு சென்று பயிற்சியில் சேர வேண்டுமெனவும் அறிவுறுத்தப்படுகிறது.

மேலும், பயிற்சியாளர்கள் பயிற்சியில் சேர்வதற்கு முன் பின்பற்ற வேண்டிய வழிமுறைகள் அனைத்தும் பார்வையில் காணும் கடிதத்தில் இணைப்பு 1–ல் தெளிவாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (இணைப்பு 1 இணைக்கப்பட்டுள்ளது)

பயிற்சியாளர்கள் தம்முடன் கொண்டு செல்ல வேண்டிய ஆவணங்கள்

1) பயிற்சிக்கு அனுப்பும் நபர்களின் விவரம் குறித்து பயிற்சி நிலையத்தால் வழங்கப்பட்ட பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பம்
2) அடையாளச் சான்றுடன் கூடிய அசல் பணி விடுப்பு ஆணை
3) ஒப்பந்த பத்திரம்
4) ஆதார் அட்டை நகல்

மேலும் பயிற்சியாளர் பவானிசாகர் பயிற்சி நிலைய இணைய தளத்தில் (www.cstibhavanisagar.in – Online Admission) இணைய வாயிலாக 18.09.2024 அன்று காலை 9.00 மணி முதல் 27.09.2024 மாலை 5.00 மணி வரை) பயிற்சியாளர்கள் தங்களது விபரங்களை பதிவேற்றம் செய்து பயிற்சிக் கட்டணத் தொகை ரூ.10,235/–னை இணைய வழியாக மட்டுமே செலுத்த வேண்டும். ரொக்கமாக பெறப்படாது. தொகை செலுத்திய UTR எண்ணை முகப்பு விண்ணப்பத்தில் மறவாமல் குறிப்பிட வேண்டும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேற்படி அலுவலர்களை பயிற்சிக்கு விடுவிக்கும்போது பயிற்சியாளர்களின் சமீபத்திய பாஸ்போட் அளவு புகைப்படம் பணிவிடுவிப்பு ஆணையில் உரிய இடத்தில் ஒட்டப்பட்டு, முறையே அலுவலகத் தலைவரால் மேலொப்பம் இடப்பட்டு விடுவிக்க வேண்டும்

ஒப்பந்த பத்திரத்தில் பயிற்சியாளர்கள் தங்களது இரண்டு மாத சம்பளம் அல்லது குறைந்தது ரூ.70,000/–க்கு குறைவில்லாமல் ஒரு ஒப்பந்தப் பத்திரத்தை தயாரிக்க வேண்டும் எனவும், இரண்டு பிரதிகள் தயார் செய்து சாட்சிகள் பிணையதார் மற்றும் அலுவலகத் தலைவர் ஆகியோர் முறையாக கையொப்பம் இட்டு ஒப்பந்தப்பத்திரம் சரியான முறையில் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதா என்பதைக் கவனித்து ஒப்பந்தப்பத்திரத்தின் கடைசியில் அலுவலக முத்திரையுடன் கையெழுத்திட்டு அனுப்ப அலுவலகத் தலைவர்

கேட்டுக் கொள்ளப்படுகிறார். ஒரு பிரதியை பயிற்சி சேர்க்கை அன்று தவறாது நேரில் சமர்ப்பிக்க வேண்டும் என்றும் மற்றொரு பிரதியை அலுவலகத்தில் பாதுகாப்பாக வைத்திருக்க வேண்டும் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் மேற்படி திரு வீ. தினேஷ்குமார், இளநிலை உதவியர், தஞ்சையினை பயிற்சியில் சேர்வதற்கு ஏதுவாக 03.10.2024 அன்று பிற்பகல் விடுவித்திடுமாறும், அதன் விவரத்தினை தலைமையலுவலகத்திற்கு தெரிவித்திடுமாறும் தொல்லியல் அலுவலர், தஞ்சை கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

இணைப்பு. மேற்படி

ஒம்/-
இணை இயக்குநர்(தொழில்நுட்பம்)

/உத்தரவுப்படி/

துணை இயக்குநர்(நிர்வாகம்)

பெறுநர்

1. திருமதி ச.கிளாரின் மதனா, உதவியர்(நி.உ), சென்னை
2. திரு வீ. தினேஷ்குமார், இளநிலை உதவியாளர், தஞ்சை (உரிய வழியாக)

நகல்

1. கண்காணிப்பாளர் அ பிரிவு,
2. கண்காணிப்பாளர், தஞ்சை
3. தொல்லியல் அலுவலர், தஞ்சை
4. உதவி இயக்குநர்(நி)/உதவி கணக்கு அலுவலர், சென்னை
5. துணை இயக்குநர்(நிர்வாகம்)/இணை இயக்குநர்(தொழில்நுட்பம்)
6. முதன்மைச் செயலாளர் மற்றும் ஆணையர்(மு.கூ.பொ) மேசைக்கு